1990 மார்ச் 31]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலை நகர்ப் பகுதியில் எம்.எம்.டி.ஏ. மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன ? ஹவுசிங் போர்டு மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன ? அந்த இரண்டு பகுதி களிலும் விற்கப்படாமல் அல்லது வாடகைக்கு விடப்படாமல் காலியாக இருக்கின்ற வீடுகள் எத்தனை என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 504 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 30 வீடுகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்த வீடுகளில் 216 வீடுகள் 1981-ஆம் ஆண்டி லும், 288 வீடுகள் 1982-ஆம் ஆண்டிலும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் காலியான வீடுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீடு தொகை.

*4047—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீடு தொகை ரூ. 3,000-ஐ மேலும் உயர்த்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உயர்த்த உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படை யில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர் களால் நிதிநிலை அறிக்கையில், அவர்களுக்கு 3 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படுகிற இந்தத் தொகை 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தித் தந்தமைக்காக, நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டு அவர் களுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்......

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி தெரிவிப்பது, பாராட்டுவது எல்லாம் கிடையாது ; உரையாற்றும்போது சொல்லிக்கொள்ளலாம். வினா இருக்கிறதா ?

திரு. இரெ. இராசமாணிக்கம் : அந்த 10 ஆயிரம் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகம் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதுதான் 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கின்றது. அதை மேலும் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை நெசவாளர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற நெசவாளர்கள்தான் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் நெசவாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

9-50 மணி

2. வினா நேரம் முடிவுற்றபின் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்திய இராணுவத்தினுடைய கடைசிப் பிரிவு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்கிறேன். ஓர் அறிப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அறிவிப்பைச் சொல்கிறேன்.